## நவம்பர் – 06 – திங்கள்

### “நேர்மையாளர்கள் உயிர்த்தெழும்பொழுது உமக்கு கைமாறு கிடைக்கும்” லூக்.14:11

### முதல் வாசகம் : உரோமையர் 11 : 29 - 36

சகோதர சகோதரிகளே! கடவுள் தாம் விடுத்த அழைப்பையும் கொடுத்த அருள்கொடைகளையும் திரும்பப் பெற்றுக் கொள்வ தில்லை. ஒரு காலத்தில் நீங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் இருந்தீர்கள் இப்பொழுது அவர்கள் கீழ்ப்படியாமல் இருப்பதால், நீங்கள் கடவுளின் இரக்கத்தைப் பெற்றுக் கொண்டீர்கள். அதுபோல, இக்காலத்தில் நீங்கள் இரக்கத்திற்குரியவர்களாக இருக்கிறீர்கள் அவர்கள் கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள் ஆனால் அவர்களும் விரைவில் இரக்கம் பெற்றுக் கொள்வார்கள் அதன் பொருட்டே இவ்வாறு நடந்திருக்கிறது. ஏனெனில், அனைவருக்கும் இரக்கம் காட்டுவதற்காகவே கடவுள் அனைவரையும் கீழ்ப்படி யாமைக்கு உட்படுத்தினார். கடவுளின் அருள் செல்வம் எத்துணை மிகுதியானது! அவருடைய ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை! அவருடைய தீர்ப்புகள் அறிவுக்கு எட்டாதவை! அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை! ”ஏனெனில் ஆண்டவரின் மனத்தை அறிபவர் யார்? அவருக்கு அறிவுரையாளராய் இருப்பவர் யார்? தமக்குக் கைம்மாறாக ஏதாவது கிடைக்கும் என முன்னதாகவே அவரிடம் கொடுத்து வைத்தவர் யார்?” அனைத்தும் அவரிடமிருந்தே வந்தன் அவராலேயே உண்டாயின் அவருக்காவே இருக்கின்றன, அவருக்கே என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

**பதில்பாடல் :** உமது பேரன்பின் பெருக்கினால் கடவுளே
எனக்குப் பதில் தாரும்

### நற்செய்தி : லூக்கா 14 : 12 - 14

அக்காலத்தில் தம்மை விருந்துக்கு அழைத்தவரிடம் இயேசு, ”நீர் பகல் உணவோ இரவு உணவோ அளிக்கும் போது உம் நண்பர்களையோ, சகோதரர் சகோதரிகளையோ, உறவினர்களையோ, செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்க வேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம். அப்பொழுது அதுவே உமக்கு கைம்மாறு ஆகிவிடும். மாறாக, நீர் விருந்து அளிக்கும்போது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் கால் ஊனமுற்றோ ரையும் பார்வையற்றோரையும் அழையும். அப்போது நீர் பேறு பெற்றவர் ஆவீர். ஏனென்றால் உமக்குக் கைம்மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நேர்மையாளர்கள் உயிர்த்தெழும் போது உமக்குக் கைம்மாறு கிடைக்கும்” என்று கூறினார்.

**தியானம்:** அழிந்து போகும் செல்வத்திற்காக உழைக்காமல், கடவுள் முன்னிலையில் செல்வம் சேர்ப்பவர்களாக நாம் மாற இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் எமக்கு அழைப்பு விடுக்கின்றது. பொதுவாக இன்றைய உலகில் மனிதர்கள் எதையும் இலாப நோக்கத்தோடும், எதிர்பாப்போடும் செய்வதைத்தான் நாம் பார்க்கின்றோம். தியாக மனப்பான்மையோடும், ஏழை எழியவர்கள் வாழ்வு உயர வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்படுபவர்களது எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்கின்றது. ஒருவருக்கொருவர் மாற்றி மாற்றி பிழைப்பு நடத்துவது வாழ்வாகிவிட்ட காலகட்டத்தில் இன்றைய நற்செய்தி வாயிலாக இறைமகன் இயேசு கூறுவது, கைமாறு தேடி செயற்படும் செயல்கள் கடவுளுக்கு விருப்பமான செயல்கள் அல்ல, மாறாக கைமாறு கருதாமல் செயற்படும் செயல்களே கடவுள் முன்னிலையில் உயர்ந்த செயல்களாக இருக்கும் என்கின்றார். நம்முடைய செயல்கள் எவ்வாறு உள்ளன? ஏழைகளுக்கும், தேவையில் உழல்பவர்களுக்கும் நாம் உதவுகின்றோமா? அழிந்துபோகும் இவ்வுலக செல்வத்திற்காக உழைக்கின்றோமா? அல்லது கடவுள் முனிலையில் செல்வம் சேர்ப்பவர்களாக வாழ்கின்றோமா? சிந்திப்போம்.